




MAKKAL KURAL (Independent National Tamil Daily) 12 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/15-17

(மலர் 44 ✱ சென்னை 3–6–2017 சனி மாலை ✱ வெளியூர் 4–6–2017 ஞாயிறு ✱ இதழ் 270)

Regd. No. TN/CC(S)DN/122/15-17







## சென்னையில் நடந்த இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாடு

★ சிறப்பான சாலை வசதி ★ 7 விமான நிலையங்கள் ★28 துறைமுகங்கள்
★ தடையில்லா மின்சாரம் ★ உட்கட்டமைப்பு வசதிகள்

# தொழில் துவங்க உகந்த மாநிலம் தமிழகம்: முதல்வர் எடப்பாடி பேச்சு

## 1 லட்சத்து 26 ஆயிரம் கோடி அன்னிய முதலீடு வந்தது

**சென்னை, ஜூன்.3–**

**தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

**உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையில் 62 ஆயிரத்து 738 கோடி முதலீட்டில் 61 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளது என்றும் முதலமைச்சர் கூறினார்.**

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான ஒப்புதல்கள் மற்றும் உரிமங்களை ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஆன்லைனில் வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் முதல்வர் கூறினார்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் 3வது தென்மண்டல மாநாடு சென்னை அடையாளில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசினார். இந்த மாநாட்டில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் பி.தங்கமணி, தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத், தொழில்துறை முதன்மைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்மண்டல தலைவர் விக்ரம் கிர்லோஸ்கர், துணைத்தலைவர் தினேஷ் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:–

இன்று நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் மூன்றாவது தென்மண்டல மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

### 76,777 பேருக்கு வேலைவாய்ப்பு




தொழில் துறையில் மட்டுமின்றி அனைத்து துறைகளிலும் தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக திகழச் செய்ய வேண்டுமென்ற ஜெயலலிதாவின் சீரிய கொள்கையின்படி இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

2015–ம் ஆண்டில், செப்டம்பர் 9 மற்றும் 10 தேதிகளில், உலகமே பாராட்டும் வகையில், தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர் மாநாடு, புரட்சித்தலைவி அம்மாவால் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டதை அனைவரும் அறிவோம். இந்த மாநாட்டினை செம்மையான முறையில் நடத்திட சிஐஐ ஆற்றிய அரும்பங்கினை நான் இத்தருணத்தில் நினைவு கூற விரும்புகிறேன்.

தகவல் தொழில் நுட்பம், உற்பத்தித் துறை மற்றும் சேவைத்துறை என அனைத்து துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியினை காணும் வகையில் முதலீட்டுக்கு தேவையான ஓர் உகந்த சூழல், தமிழகத்தில் எப்போதும் திகழ்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியினை மேலும் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், புரட்சித்தலைவி அம்மா வகுத்துத் தந்த "விஷன் 2023" என்ற தொலைநோக்குத் திட்டம், பல்வேறு துறைகளில், நமது மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளையும், செயல்படுத்த வேண்டிய திட்டங்களையும் மிகத் துல்லியமாக குறிப்பிட்டுள்ளது.

### இணைந்து செயல்படுவோம்

இந்த இலக்குகளை எய்தவும், நீண்ட நாள் வளர்ச்சிப்பாதையில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கொண்டு செல்லவும், அரசுடன் இங்கு வருகை புரிந்துள்ள உங்களைப்போன்ற தொழில் நிறுவனங்களும், தொழில் கூட்டமைப்புகளும் இணைந்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். அந்த வகையில் இன்று நடைபெறும் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இத்தருணத்தில், புரட்சித்தலைவி அம்மா 2001 ல் தொடங்கிவைத்த 'கனெக்ட்' (Connect) என்ற தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த கருத்தரங்கை தமிழ்நாடு அரசும், சிஐஐயும் இணைந்து கடந்த 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழில்துறையில் பல முக்கிய செயல் திட்டங்களை, தமிழ்நாடு அரசு தற்போது வகுத்து வருகிறது. மாறி வரும் உலக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப, இந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழகத்தில் தொழில் தொடங்கிட, ஏற்கனவே உள்ள உகந்த சூழ்நிலையை மேலும் எளிமைபடுத்தும் வகையில், தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஒப்புதல்கள் மற்றும் உரிமங்களை ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஆன்லைனில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இது நடைமுறைக்கு கொண்டு வரப்படும். அது மட்டுமன்றி, தேவைப்படின், இதற்கு ஏற்ற சட்டங்களும் இயற்றப்படும்

(3–ம் பக்கம் பார்க்க)



# நடிகை ஷெர்லி தாசை மணந்தார் டைரக்டர் வேலு பிரபாகரன்

**சென்னை, ஜூன் 3–**

**இயக்குனர் வேலு பிரபாகரன் – நடிகை ஷெர்லி தாஸ் திருமணம் இன்று நடைபெற்றது.**

இயக்குனர் வேலு பிரபாகரன் – நடிகை ஷெர்லி தாஸ் திருமணம் இன்று (3 ஜூன்) காலை 10.25 மணியளவில் பத்திரிக்கையாளர்களின் முன்னிலையில் சென்னையில் உள்ள லீ மேஜிக் லேண்டர்ன் திரையரங்கில் நடைபெற்றது.

''நாளைய மனிதன், கடவுள், புரட்சிக்காரன்'' உள்ளிட்ட பல படங்களை இயக்கியவர் வேலு பிரபாகரன். இவர் இயக்கிய ஒரு இயக்குனரின் காதல் டைரி திரைப்படம் நேற்று வெளியானது குறிப்படத்தக்கது. மணமகள் நடிகை ஷெர்லி தாஸ், வேலு பிரபாகரன் இயக்கிய மீண்டும் ஒரு காதல் கதை படத்தில் கதாநாயகியாக நடித்தவர். மணமக்கள் இருவரும் மோதிரம் மாற்றி திருமணம் செய்து கொண்டனர். இதில் வேலு பிரபாகரனுக்கு வயது 60. மணமகள் ஷெர்லி தாசுக்கு வயது 35 என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜூலை 29 முதல் ராமேஸ்வரத்திலிருந்து அயோத்திக்கு நேரடி ரெயில் சர்வீஸ்

புதுடெல்லி, ஜூன் 3–

உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்திக்கும் தமிழகத்தில் உள்ள ராமேஸ்வரத்துக்கும் இடையே நேரடி ரயில் சேவை வசதி, ஜூலை, 29ம் தேதி முதல் துவங்க உள்ளது.

அயோத்தி சட்டசபை தொகுதி இடம் பெற்றுள்ள பாசியாபாத் லோக்சபா தொகுதியின் பாரதீய ஜனதா எம்.பி.,லாலு சிங் இதைத் தெரிவித்தார்.

''2 புனித நகரங்களுக்கு இடையே இதுவரை நேரடி ரெயில் சேவை கிடையாது. அயோத்தி ரெயில்வே ஸ்டேஷனில், ஜூலை, 29ம் தேதி இந்த ரெயில் சேவை துவக்கி வைக்கப்படும். அன்றைய தினம் அயோத்தி ரெயில்வே ஸ்டேஷனை நவீனப்படுத்தும் பணியை ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு துவக்கி வைக்கிறார் என்றார்.

மக்கள் மனதில் முக்கிய இடத்தை பிடித்துள்ள அயோத்தி நகரை மேம்படுத்த வேண்டும் என்பது பிரதமர் மோடி, உத்திரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோரின் விருப்பமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

5 தென் மாநிலங்களில் பாரதீய ஜனதா கட்சி, தன்னுடைய காலைப் பதிக்கும் முயற்சிகளில் இது ஒன்றாகும். ராமேஸ்வரத்திலிருந்து இலங்கை செல்ல கடலின் குறுக்கே ராமசேது என்று ஒரு பாலத்தை ஸ்ரீராமபிரான் அமைத்தார் என்று இதிகாசம் கூறும்.


80% மனைகள் விற்கப்பட்டுவிட்டன.

முந்துங்கள்! விலை உயரும் முன், இன்றே வாங்குங்கள்!

வழங்குகிறோம்

VGN COSMOPOLIS

PLOTS NEAR AMBATTUR TELEPHONE EXCHANGE

CMDA அங்கீகாரம் பெற்ற வீட்டுமனைகள்
சென்னை மாநகராட்சி எல்லைக்குள்.
அண்ணா நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில்.

₹5599* சதுர அடிக்கு

753 சதுர அடி முதல் 2400 சதுர அடி வரையான வீட்டுமனைகள்.

வசதிகள்:
- திடமான தார் சாலைகள்
- சாலையோர மரங்கள்
- LED தெரு விளக்குகள்
- அழகுற வடிவமைக்கப்பட்ட பூங்கா
- நிலத்தடி நீர்
- கட்டுமானத்துக்கு தயார் நிலையில்

UP TO 80% BANK LOAN FACILITATED

CMDA APPROVED

100% CLEAR TITLE



Actual site images.


திடமான தார் சாலைகள்


LED தெரு விளக்குகள்


அழகுற வடிவமைக்கப்பட்ட பூங்கா


ஆம்பிதியேட்டர்

*PLC & Registration charges extra.

புக்கிங் அட்வான்ஸ் ரூபாய் 1 லட்சம். புக்கிங் செய்ய வரும்போது உங்கள் செக் புக் / டெபிட் கார்ட் / கிரெடிட் கார்டை கொண்டு வாருங்கள்.

VGN PROPERTY DEVELOPERS PVT. LTD.
No. 15, 2nd Street, Wallace Garden,
Nungambakkam, Chennai - 600 006.

CALL: 044 - 4343 9999

VGN CREATING ASSETS SINCE 1942

Member: CREDAI

For online enquiries, log on to www.vgn.in

CMDA APPROVAL NO: 35/2016

LOANS APPROVED BY: ICICI Bank Home Loans, HDFC Home Loans, Indiabulls Home Loans, AXIS BANK, Indian Bank

PROJECT FUNDED BY: XANDER FINANCE

Disclaimer: The information contained herein is subject to change as may be required by the authorities and cannot form an offer or contract. While every reasonable care has been taken in providing the information, VGN or their agents cannot be held responsible for any inaccuracies. VGN reserves the right to make alterations and amendments as may be necessitated from time to time without prior notice.